புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | ஏப்ரல் 20, 2023 | புரட்சி 22 | முழக்கம் 14 | விலை: ரூ.3.00

## ● அமைச்சர் உதயநிதி – அய். பெரியசாமி, சட்டமன்ற உறுப்பினர்களிடம் நேரில் மாநாட்டு அழைப்பிதழ்
## ● நன்கொடை திரட்டும் பணியில் தோழர்கள் தீவிரம்




# பேரெழுச்சியுடன் சேலம் மாநாட்டுப் பணிகள்

**சென்னை :** சேலத்தில் வருகிற 29,30 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள இது தமிழ்நாடு! இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாடு! அழைப்பிதழை, மாநாட்டில் சிறப்புரையாற்ற உள்ள மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி உள்ளிட்ட கழகத் தோழர்கள் நேரில் சந்தித்து வழங்கினார்கள்.

சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியம், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினரும், விசிக தலைவருமான தொல்.திருமாவளவன், விசிக துணைப் பொதுச்செயலாளர் வன்னிஅரசு, மக்கள் உரிமை பாதுகாப்பு மையம் மருதையன், தபெதிக பிரச்சார செயலாளர் சீனி.விடுதலை அரசு, திராவிட இயக்கத் தமிழர் பேரவை துணைப் பொதுச்செயலாளர் சிங்கராயர், கருஞ்சட்டைப் பதிப்பக இயக்குனர் பெல் ராஜன், யூடியூபர்கள் மைனர் வீரமணி, மகிழ்நன் உள்ளிட்ட தோழர்களுக்கு மாநாட்டு அழைப்பிதழை கழகத் தோழர்கள் வழங்கினார்கள்.

மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலுவை சந்தித்து மாநாட்டு அழைப்பிதழை மயிலைப் பகுதித் தோழர்கள் இராவணன், மனோகர், பிரவீன், அஜித் உள்ளிட்டோர் வழங்கினார்கள்.

**சேலம் :** திமுக மேற்கு மாவட்டச் செயலாளர் T.M. செல்வகணபதியை நேரில் சந்தித்து கழக மாநில மாநாட்டு அழைப்பிதழை கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், மாவட்ட பொறுப்பாளர்கள் டேவிட், சக்திவேல், கோவிந்தராஜ், அன்பு, சம்பத்குமார், பாலு, குமார் ஆகியோர் வழங்கினார்கள்.

**மாநாட்டுக்கான நன்கொடை திரட்டும் பணி :** 10.4.2023 அன்று சேலம் மேற்கு மாவட்டக் கழக சார்பில் மேட்டூரில் மதியம் 3 மணிக்கு கீதா, சரஸ்வதி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மேட்டூர் பகுதி வியாபாரிகள் பொதுமக்கள் மற்றும் அனைத்துக் கட்சி நண்பர்களும் மாநாட்டு நிதியை மிகவும் உற்சாகத்தோடு வழங்கினார்கள். ரூ.24,020 நன்கொடை திரட்டப்பட்டது.

பங்கேற்றோர் : மேட்டூர் பகுதி : கோவிந்தராஜ், கிட்டு, தேவராஜ், முத்துராஜ், அம்ஜத்கான், சம்பத், திவாகர், பிரபாகரன், விஜய்.

மேட்டூர் ஆர்.எஸ் பகுதி : ஜெகதீஷ், நாகராஜ், பெர்னாட், சுசீந்திரன், ராமச்சந்திரன். நங்கவள்ளி பகுதி : குமார், இந்திராணி, அருள், அன்பு. கொளத்தூர் பகுதி : அறிவு, சரஸ்வதி, சுதா, மாரி செட்டி.

10.04.2023 அன்று மேட்டூரில் நடைபெற்ற தனிநபர் வசூலின் போது அதிமுக மாநிலங்களவை உறுப்பினர் சந்திரசேகர் ரூ.25,000–யை மாநாட்டு நன்கொடையாக வழங்கினார். பல் மருத்துவர் சந்திரமோகன் ரூ.2000–யை நன்கொடையாக வழங்கினார்.

**தாரமங்கலம் :** 11.04.2023 செவ்வாய் காலை 10 மணிக்கு சேலம் கிழக்கு மாவட்ட வசூல் குழுவின் சார்பில் குடந்தை பாலன், கே.ஆர்.தோப்பூர் கண்ணன் ஆகியோர் தலைமையில் காலை 10 மணிக்கு தாரமங்கலம், கொல்லப்பட்டி ஆகிய பகுதிகளில் கடைவீதி வசூல் பணி நடைபெற்றது.

பாமக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கண்ணையன் பெரும் தொகை அளித்து ஊக்கமளித்தார். கொல்லப்பட்டி பகுதிகளில் வணிகர்கள் குறிப்பாக பெண்கள் ஆதரவு பெருமளவு இருந்தது மகிழ்ச்சி அளித்தது. ரூ.25,000 நன்கொடை திரட்டப்பட்டது. கிருஷ்ணன், குடந்தை பாலன், கே.ஆர்.தோப்பூர் கண்ணன், தங்கதுரை, சேலம் சரவணன், திவ்யா, சேகர், பிரபாகரன், நங்கவள்ளி கண்ணன், சேலம் கனிமொழி, வனவாசி உமாசங்கர், கவியரசு, ராமசந்திரன், சேலம் சீதா, சேலம் கோமதி ஆகியோர்.

12.04.2023 புதன் கிழமை காலை 10 மணிக்கு சேலம் கிழக்கு மாவட்ட வசூல் குழுவின் சார்பில் முத்துநாயக்கன்பட்டி பகுதியில் கடைவீதி வசூல் நடைப்பெற்றது. ரூ.7,580 நன்கொடை திரட்டப்பட்டது.

பங்கேற்றோர் : கிருஷ்ணன், குடந்தை பாலன், பவளத்தானூர் தனசேகர், கே.ஆர்.தோப்பூர் கண்ணன், தங்கதுரை, பிரபாகரன், திவ்யா, கோபி, (குட்டீஸ் நிலா, தமிழ்) , உமா சங்கர், அருள் பாண்டியன், அஜித் குமார், விஜய், அஜய், கார்த்தி.

**சங்ககிரி :** 13/4/23 அன்று சேலம் மேற்கு மாவட்ட கழக சார்பில் தனிநபர் வசூல் சங்ககிரி பகுதியில் காலை 12 மணிக்கு சங்ககிரி செந்தில்குமார், நாகராஜ்



ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. அரசு அதிகாரிகள், வழக்கறிஞர்கள் என கழக ஆதரவாளர்கள் மாநாட்டு நிதியை வழங்கி ஆதரவு தெரிவித்தனர். தனிநபர் வசூலாக ரூ.16,710 திரட்டப்பட்டது.

பங்கேற்றோர் : மேட்டூர் பகுதி : முத்துராஜ், விஜய், மேட்டூர் ஆர்.எஸ் பகுதி : சுசீந்தர், ஜெகதீஷ், நாகராஜ், ராமச்சந்திரன், பெர்னாட், நங்கவள்ளி பகுதி : குமார், உமா சங்கர், அருள், இந்திராணி, ராஜேந்திரன், அன்பு. கொளத்தூர் பகுதி : அறிவுசெல்வன், சுதா, சரஸ்வதி, கோபால், சங்ககிரி செந்தில்குமார், வெள்ளரி வெள்ளி பகுதி : விஜய்பாபு. வழக்கறிஞர் வித்யாபதி வசூலில் கலந்துகொண்ட தோழர்களுக்கு அசைவ உணவு வழங்கி சிறப்பித்தார்.

**இளம்பிள்ளை :** 15.04.2023 சனிக்கிழமை அன்று கடைவீதி வசூல், இளம்பிள்ளை பகுதியில் சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை தலைமையில் காலை 11 மணியளவில் தொடங்கியது.

தறி தொழிலாளர்கள், ஜவுளி வியாபாரிகள் என அனைத்து தரப்பு மக்களும் மாநாட்டு நிதியை வழங்கி ஆதரவு தெரிவித்தனர். இளம்பிள்ளையில் ரூ.18,700 நன்கொடை திரட்டப்பட்டது.

பங்கேற்றோர் : இளம்பிள்ளை பகுதி : கோபி, தங்கதுரை, திவ்யா, பெரியார் விழுது நிலா, தமிழ், ரவி, ரமேஷ், குட்டி, குப்புசாமி, சேகர், மணி, சதாசிவம். சேலம் மாநகரம் : ஆனந்தி, தேவராஜ், செல்வமணி, அருள் பாண்டியன், பர்கேஷ், சந்தோஷ்.

**நங்கவள்ளி பகுதி :** கிருஷ்ணன், பிரபாகரன், உமாசங்கர், நந்தினி. தாரமங்கலம் பகுதி : குடந்தை பாலன்.

**மதுரை :** மதுரை மேலூர் பகுதிகளில் கழகத் தோழர்கள் மாநாட்டு சுவர் விளம்பரப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து மதுரை மாநகராட்சி மேயர் தேன்மொழி இணையர் பொன் வசந்த், மக்கள் உரிமை பாதுகாப்பு மையம் வழக்கறிஞர் வாஞ்சிநாதன், அதிமுக பசும்பொன் பாண்டியன், தமிழ் புலிகள் கட்சி முத்துகுமார், விசிக தாமரை வளவன், மருத்துவர் சௌந்தரபாண்டியன் ஆகியோரை சந்தித்து மாநாட்டு அழைப்பிதழை கழகத் தோழர்கள் வழங்கினார்கள்.

**திண்டுக்கல் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி, சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் உள்ளிட்டோரை சந்தித்து கழகத் தோழர்கள் மாநாட்டு அழைப்பிதழை வழங்கினார்கள்..

பின்பு ஏப்ரல் 6, 7 ஆகிய தேதிகளில் கடைவீதி வசூலை தோழர்கள் மேற்கொண்டனர்.

**கோவை :** திமுகவை சேர்ந்த கவுன்சிலர்கள், பகுதி கழக செயலாளர்கள், மண்டல தலைவர்கள் மீனா லோகு, தெய்வானை தமிழ்மறை, முத்து மாணிக்கம், திலக் பாபு, துரை செந்தமிழ் செல்வன், தளபதி மனோஜ் ஆகியோரை சந்தித்து மாநாட்டு அழைப்பிதழை வழங்கி மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

# கல்வி, வேலை, சமூகத் துறைகளில் திராவிட இயக்கச் சாதனை

ரம்யா

*12.03.2023 அன்று திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற "அன்னை மணியம்மையார் பிறந்தநாள் மற்றும் மகளிர் தின பெண்கள் சந்திப்பு" நிகழ்ச்சியில் நிகழ்த்திய உரையின் சென்ற இதழ்த் தொடர்ச்சி.*

கல்வி, வேலைவாய்ப்பில் தமிழ்நாட்டுப் பெண்கள், மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் எவ்வளவு வேகமாக முன்னோக்கி ஓடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே, திராவிட மாடலின் சாதனைக்கு சாட்சியாக இருக்கிறது. தமிழ்நாட்டில் எழுத்தறிவு இல்லாத இளம்பெண்கள் 15 முதல் 24 வயது வரை 2.93% இருக்கிறார்கள். (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில்) இதில் கேரளா மட்டும்தான் நம்மை விட முன்னேறி இருக்கிறது. அங்கு எழுத்தறிவு இல்லாத இளம்பெண்கள் 0.09% மட்டும்தான். ஆனால், பீகாரில் 36.2%, ராஜஸ்தானில் 28.7%, ஜார்கண்டில் 28.64%, உத்திரப் பிரதேசத்தில் 24.22%, மத்திய பிரதேசத்தில் 22.39%, குஜராத்தில் 15% என வட இந்தியாவின் பல இந்தி பேசும் மாநிலங்களில் இரட்டை இலக்கங்களில்தான் நிலைமை இருக்கிறது.

தமிழ்நாட்டில் பெண்கள் எழுத்தறிவு அதிகம் பெற்றிருப்பதற்கு பள்ளிக்கூடங்கள் அதிகமாக கட்டப்பட்டிருப்பது மட்டுமே காரணம் அல்ல. முதல் காரணம் வறுமை ஒழிப்பு. அண்ணாவின் ஆட்சிக்காலம் தொட்டு, வறுமை ஒழிப்பில் திராவிட ஆட்சியாளர்கள் பெரிதும் அக்கறை காட்டினர். ஒன்றிய அரசிடம் கேட்டு கேட்டுப் பார்த்தும், போதுமான அரிசியை கொடுக்க மறுக்கவே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தை தொடங்கி, நேரடி கொள்முதலுக்கு வித்திட்டார் கலைஞர். கொள்முதல் செய்த அரிசியை வீடுதோறும் கொண்டுசேர்க்க நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தினார். பின்னர் வந்த எம்ஜிஆர் ஆட்சிக்காலத்தில் நியாய விலைகளின் எண்ணிக்கை உயர்ந்தது. தமிழ்நாட்டைப் போல பலமான பொது விநியோகக் கட்டமைப்பு இந்தியாவில் இப்போதும் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது.

அதன் பலன் பலருக்கும் தெரிவதில்லை. 2016 ல் இந்தியாவில் 12 கோடிக்கும் அதிகமானோர் மிகக் கடுமையான வறுமையில் இருந்தார்கள். பீகார், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற பல வட மாநிலங்களின் வறுமைக்கோட்டு நிலை, சமூக வளர்ச்சிக் குறியீடுகளில் பின் தங்கியிருக்கும் சில ஆப்ரிக்க நாடுகளுக்கு இணையாக இருந்தது. ஆனால் ரஷ்யா, டென்மார்க், ஜெர்மனி, ஸ்பெயின் போன்ற பல நாடுகளைக் காட்டிலும் தமிழ்நாடு வறுமைக் கோட்டு நிலையில் மேம்பட்டு இருப்பதாக 2012-இல் வெளியான உலக வங்கியின் அறிக்கை கூறுகிறது. ஆக, வறுமையை ஒழிக்க தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியாளர்கள் கொடுத்த பங்களிப்பு பலனைக் கொடுத்திருக்கிறது.

பள்ளிகளில் மதிய உணவு கொடுத்ததும் மாணவர் சேர்க்கை அதிகரிக்க மற்றொரு முக்கியக் காரணம் என்றே கூறலாம். பெண்கள் படிக்க செல்ல வேண்டுமானால் மாதவிடாய் கால சுகாதார வசதிகள் கிடைப்பது அவசியம். menstrual hygiene மிக முக்கியக் காரணமாக இருக்கிறது. மேற்கு வங்கம், ஜார்கண்ட், ஒடிசா, சத்தீஸ்கர், உத்திரப் பிரதேசம், அசாம், மத்திய பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் 15 வயது முதல் 24 வயதுக்கு உட்பட்ட இளம் பெண்களில், சரிபாதி பேருக்கு மாதவிடாய் கால சுகாதார வசதிகள் கிடைப்பதில்லை என்று ஆய்வுகள் சொல்கின்றன. 2018-இல் 'திசு வயர்' இணைய ஊடகத்தில் வந்த ஒரு கட்டுரையில், அங்கெல்லாம் இளம்பெண்கள் இன்னும் மாதவிடாய் காலத்தில் துணியையே அதிக அளவில் பயன்படுத்துவதாகக் கூறுகிறது. அதுமட்டுமல்ல, பள்ளிக்கூடங்களில் கழிப்பறை வசதி இல்லாததால் பெண் குழந்தைகள் வயதுக்கு வந்துவிட்டால் இடைநிற்க வேண்டியதாகிவிடுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் 90%-க்கும் அதிகமான மாணவிகள் நாப்கின் பயன்படுத்துகிறார்கள். பள்ளிக்கூடங்களில் கழிப்பறைகள் இருக்கின்றன. அதனால் தமிழ்நாட்டு இளம்பெண்கள் மாதவிடாய் காலங்களை சுகாதாரமாக பேணுகிறார்கள். அரசே இலவசமாக நாப்கின் வழங்குவதால் இடைநிற்றலுக்கு இங்கு இது காரணமே கிடையாது.

அதனால்தான் தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 48.6 சதவீதமாக உள்ளது. சண்டிகர், புதுச்சேரி, கேரளா போன்ற 3 சிறிய மாநிலங்கள் மட்டும்தான் நம்மை விட மேம்பட்டு இருக்கின்றன. அதுவும் 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பை அடிப்படையாக வைத்து வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்கள் இவை. 2021-இல் மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தாமலேயே பாஜக அரசு காலம் தாழ்த்தி வருகிறது. இப்போது கணக்கெடுப்பு நடத்தி தரவுகள் வெளியிடப்பட்டால் தமிழ்நாட்டில் பெண்களின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் நிச்சயம் 50% -ஐ தாண்டும்.

வேலைவாய்ப்பை எடுத்துக்கொண்டாலும், இந்தியாவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகவே இருக்கிறது. "கடன் வாங்குவதில் கலங்காத பெண்கள்" என்ற ஒரு தலைப்பில் மார்ச் 8-ஆம் தேதி தினமலர் நாளேட்டில் ஒரு செய்தி வந்தது. தலைப்பைப் பார்க்கும்போது எதிர்மறையான செய்தி போலத் தெரியலாம். வீட்டுக்கடன், வாகனக்கடன் வாங்குவதில் தமிழ்நாட்டு பெண்கள் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் இருக்கிறார்கள். முதலிடத்தில் மகாராஷ்டிரா பெண்கள் இருக்கிறார்கள். தனிநபர் கடன் வாங்குவதில் தமிழ்நாட்டுப் பெண்கள் முதல் இடத்தில் இருக்கிறார்கள். இதுதான் அந்த செய்தி. 'கிரிப் ஹைமார்க்' என்ற கடன் தரவுகள் நிறுவனத்தின் பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில், பல்வேறு ஆங்கில ஊடகங்களிலும் இச்செய்தி வெளியாகியிருந்தது.

மேலோட்டமாக பார்ப்பவர்களுக்கு தமிழ்நாட்டுப் பெண்கள் பொறுப்பில்லாமல் இப்படி கடன் வாங்குகிறார்களே என்று தோணலாம். ஆனால் யார் கடன் வாங்குவார்கள்? தன்னால் கடனை அடைக்க முடியும் என்ற திறன் உள்ளவர்கள், அதற்கான வருமானம் இருப்பவர்கள்தான் கடன் வாங்குவார்கள். மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் பெண்கள் வேலைக்குச் செல்கிறார்கள், அதனால் துணிந்து கடன் வாங்குகிறார்கள்.

ஆக கல்வி, வேலை, சமூகம் என அனைத்து தளங்களிலும் பெண்களின் வளர்ச்சியில் இந்த நூற்றாண்டில் திராவிட இயக்கம் அழுத்தமான பங்களிப்பைக் கொடுத்திருக்கிறது. அதனால் இந்தியாவில் தனித்துவமான பெண்களைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உருவாகியிருக்கிறது. இன்னும் அடைய வேண்டிய இலக்குகள் ஏராளம் இருக்கலாம், ஆனால் மற்ற மாநிலங்கள் இன்னும் பல ஆண்டுகள் கழித்து அடையப்போகிற இலக்கை இப்போதே கொடுத்திருப்பது "திராவிட மாடல்". அதை அழுத்தமாக பதிவு செய்ய வேண்டியதும், அடுத்தடுத்த இலக்குகளை நோக்கி பயணப்பட வேண்டியதும் நமது கடமை.

(நிறைவு)

# அரசியல் இலாபத்துக்காக நடத்தப்பட்டதே 'புல்வாமா' தாக்குதல்

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பு பிப்ரவரி 14ஆம் தேதி ஜம்மு காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தில் இந்திய ராணுவத்தினர் மீது தீவிரவாதிகளின் தற்கொலைப் படை தாக்குதல் ஒன்றை நடத்தியது. இந்த தாக்குதல் அப்போது நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியது. 40 இந்திய ராணுவத்தினர் வீர மரணம் அடைந்தனர். பாஜக இதையே தன்னுடைய தேர்தல் பிரச்சாரமாகவும் மாற்றிக் கொண்டது. நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து வந்துவிட்டது,

பாஜக மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற பிரச்சாரத்தை அவர்கள் முடுக்கி விட்டார்கள். இது குறித்து அப்போது ஜம்மு காஷ்மீர் மாநில ஆளுநராக இருந்த சத்யபால் மாலிக் இரண்டு நாட்களுக்கு முன்பு "The Wire" இணையதளத்திற்காக கரண் தாப்பருக்கு ஒரு பேட்டியை அளித்திருக்கிறார். அந்த பேட்டியில் அவர் தெரிவித்திருக்க கூடிய கருத்துக்கள் அதிர்ச்சி தரக்கூடியவை, இது அரசியல் நோக்கத்திற்காக நடத்தப்பட்ட தாக்குதல் என்பதை அவரும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இராணுவத்தினர் ஜம்முவில் இருந்து ஸ்ரீநகர் செல்வதற்கு ஐந்து இராணுவ விமானங்களை அனுப்பி உதவுமாறு பாதுகாப்புத்துறை அமைச்சகத்திடம் கேட்ட போது பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் விமானங்களை அனுப்ப முடியாது என்று கூறிவிட்டார். இதன் காரணமாக இராணுவத்தினர் ஜம்முவில் இருந்து ஸ்ரீநகருக்கு தரைவழி மார்க்கமாக செல்ல வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர். அதன் காரணமாகத்தான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தாக்குதலை நடத்தி முடித்து இருக்கிறார்கள் தீவிரவாதிகள்.

இது குறித்து பிரதமர் மோடியிடம் பிரச்சினையை எடுத்துச் சென்ற போது வாயை மூடிக்கொண்டு அமைதியாக இருங்கள், எதுவும் பேசக்கூடாது என்று மோடி உத்தரவிட்டதாகவும், அதே போல் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலும் அமைதிக்காக்கும் படியும் தன்னை அறிவுறுத்தியதாகவும் சத்யபால் மாலிக் தற்போது குற்றம்சாட்டியிருக்கிறார்.

ஊழல் எதிர்ப்பில் மோடி மிகப்பெரிய அக்கறையுள்ளவர் என்று கூற முடியாது என்று கூறியுள்ள அவர் கோவாவில் நடந்த பாஜக ஆட்சியின் ஊழலை ஒன்றிய ஆட்சியின் கவனத்திற்கு கொண்டு சென்ற போது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், தன்னை மேகாலயாவிற்கு ஆளுநராக மாற்றினார்கள் என்று அவர் கூறியிருக்கிறார். குடியரசு தலைவர் திரௌபதி முர்முவை சந்திக்க அனுமதி கேட்ட போது, கடைசி நேரத்தில் பிரதமர் அலுவலகம் தலையிட்டு அதை நிறுத்தியதாகவும் குற்றம்சாட்டியிருக்கிறார்.

சத்யாபால் மாலிக் பாஜகவில் முக்கிய பொறுப்புகளில் இருந்தார். நான்கு மாநிலங்களில் ஒன்றிய பாஜக ஆட்சியால் ஆளுநராக நியமிக்கப்பட்டவர், தேசபக்தியையும், இராணுவத்தினரையும் தேர்தல் அரசியலுக்காக பாஜக எப்படி பயன்படுத்திக் கொண்டது என்ற அவரது குற்றச்சாட்டை நாம் எளிதில் புறக்கணித்துவிட முடியாது.

பா.ஜ.க.வின் 'தேசபக்தி' வாக்கு வங்கிக்காகவே பயன்படுத்தப்படும் கச்சாப் பொருளாகிவிட்டது.

## மாநாட்டு நன்கொடையை அனுப்ப விரும்புவோர் கீழ்கண்ட வங்கிக் கணக்கிற்கு அனுப்பலாம்

**வங்கிக் கணக்கு**

'புரட்சிப் பெரியார் முழக்கம்'

PURATCHI PERIYAR MUZHAKAM

கரூர் வைஸ்யா வங்கி,
அடையாறு கிளை

Karur Vysya Bank, Adyar Branch

'கரண்ட்' அக்கவுண்ட் எண் :

Current Acct No.: 1257115000002041

IFSC : KVBL0001257

கூகுள் பே எண் : 9444115133

## கழகத் தோழர் திலீபன் மீது வன்முறைக் கும்பல் தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர்திலீபன் (பழனி) மீது கொடும் தாக்குதல் நடத்தியவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வேலூர் மாவட்ட செயலாளர் சிவா தலைமையில் பாணாவரம் காவல்நிலைய முற்றுகை போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மக்கள் அதிகாரம், மக்கள் தமிழகம் கட்சி, ஊர் பொது மக்கள் தோழைமை இயக்கத் தோழர்கள் 100 மேற்பட்டோர் கலந்து கொண்டனர். போராட்டத்தின் முடிவில் தோழர்கள் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் சிறைவைக்கப்பட்டனர். நிகழ்வில் தலைமை குழு உறுப்பினர் அய்யனார், சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, மக்கள் தமிழகம் கட்சி விஸ்வநாதன், மக்கள் குடியரசு இயக்கம் ஜான் மண்டேலா, திவிக பேரணாம்பட்டு நகர செயலாளர் தோழர்கள் ச.பார்த்திபன், மற்றும் மகிழவன், இரண்யா, அன்பழகன், ராஜேஷ், மணி, அருண், சூரியா, குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ● இது தமிழ் நாடு; இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாடு ● கருத்துச் செறிவு அரங்கங்கள்; கலை நிகழ்ச்சிகள்

# அடர்த்தியான நிகழ்வுகளுடன் சேலம் மாநாடு

ஏப்ரல் 29,30 – சேலம் : திராவிடர் விடுதலைக் கழகத்தின் 2 நாள் மாநில மாநாடு.

29.04.2023 – பெரியார் அரங்கம் : காலை 9.00 மணி – கழகக் கொடியேற்றம் – நிர்மல்குமார் மாநகர அமைப்பாளர், கோவை 9.30 – புதுவை “விடுதலைக் குரல்” கலைக்குழு இசை நிகழ்ச்சி.

தொடக்க உரை : DNV செந்தில்குமார் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், தி.மு.க.

**10.30 – கருத்தரங்கம் – கருப்பு சிவப்பு நீலம் இணையும் புள்ளிகள்**

**தலைமை :** இராம இளங்கோவன் (வெளியீட்டு செயலாளர்)

மாநில உரிமைகளில் : மருத்துவர் எழிலன் (ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர்)

சனாதன எதிர்ப்பில் : பேராசிரியர் ஜெயராமன் (தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்)

கார்ப்பரேட் சுரண்டலில் : மதுக்கூர் இராமலிங்கம் (தீக்கதிர் ஆசிரியர்)

பெண்ணியலில் : முனைவர் சுந்தரவள்ளி (த.மு.எ.க.ச.)

இட ஒதுக்கீட்டில் : கு.அன்பு தனசேகர் (கழக தலைமைக் குழு உறுப்பினர்

போலி அறிவியல் எதிர்ப்பில் : எட்வின் பிரபாகரன் (தி.வி.க)

**பிற்பகல் 1.00 மணி – இசை : மேட்டூர் டி.கே.ஆர் இசைக்குழு**

**2.30 – உரை வீச்சு – ஏற்காது தமிழ்நாடு!**

தலைமை : வீ.சிவகாமி தலைவர், தமிழ்நாடு அறிவியல் மன்றம்

நீட் திணிப்பை : மருத்துவர் இரவீந்திரநாத் (சமூக நீதிக்கான மருத்துவர் சங்கம்)

கருவறைத் தீண்டாமையை : வழக்கறிஞர் வாஞ்சிநாதன் (மக்கள் உரிமை பாதுகாப்பு மையம்)

ஒன்றியப் பணிகளில் வடவர் ஆதிக்கத்தை : துரை. பரிமளராசன் (கழக முகநூல் பொறுப்பாளர்)

இணையதள திரிபுகளை : க.விஜய்குமார் (கழக இணையதள பொறுப்பாளர்)

இந்தி, சமஸ்கிருத திணிப்பை : கா.இரவிபாரதி (காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்)

ஒன்றை ஆட்சித் திணிப்பை : இரண்யா (சென்னை மாவட்ட இணைய தளப் பொறுப்பாளர்)

**மாலை 4.30 மணி – குழந்தைகள் கலை நிகழ்ச்சி**

தலைமை : நா.இளையராஜா (கழக தலைமைக் குழு உறுப்பினர்)

**5.30 – வரலாற்று அரங்கம் – வைதீக எதிர்ப்பில் வழிகாட்டும் முன்னோடிகள்**

தலைமை : பால்.பிரபாகரன் (கழகப் பரப்புரைச் செயலாளர்)

வள்ளலார், சித்தர்கள் : புலவர் செந்தலை கவுதமன் (பாவேந்தர் பாரதிதாசன் பேரவை)

தேவநேயப் பாவாணர் : பொழிலன் (தமிழக மக்கள் முன்னணி)

புத்தர் : மருத்துவர் தாயப்பன்

அத்திப்பாக்கம் வெங்கடாசலனார் : வாலாசா வல்லவன் (மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி)

பாரதிதாசன் : பேராசிரியர் மணிகோ. பன்னீர்செல்வம் (பாரதிதாசன் இயல் ஆய்வாளர்)

மணியம்மையார் : தேன்மொழி (சென்னை தி.வி.க.)

**9.30 – அறிஞர் அண்ணாவின் “சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்” மு.கலைவாணன் குழுவினரின் பொம்மலாட்ட நாடகம்.**

**30.04.2023 – அம்பேத்கர் அரங்கம். (இரண்டாம் நாள்)**

காலை 9.00 மணி – இசை நிகழ்ச்சி

10.00 – குறும்படங்கள் வெளியீடு

**10.30 – ஆய்வரங்கம் : திரிபுவாதங்களை தோலுரிப்போம்!**

**தலைமை :** வழக்கறிஞர் இரா.திருமூர்த்தி (சென்னை உயர்நீதிமன்றம்)

மார்க்ஸ், டார்வின் இந்தியாவை சிதைத்தார்களா? : செந்தில் (இளந்தமிழகம்)

திராவிடம் வீழ்த்தியதா? : நா.அய்யனார் (கழக தலைமைக் குழு உறுப்பினர்)

ஆளுநரா? ஒன்றிய அடியாளா? க.இராமர் (கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர்)

சரஸ்வதி நாகரீகமும், கீழடியும் : திருப்பூர் மகிழவன் (தமிழ்நாடு மாணவர் கழகம்)

அம்பேத்கர் இந்துத்துவவாதியா? வழக்கறிஞர் இரா.சிவா (வேலூர் மாவட்டச் செயலாளர்)

**மாலை 3.30 மணி – எழுச்சிப் “பேரணி”**

**தலைமை : இரா.உமாபதி சென்னை மாவட்டச் செயலாளர்**

**5.00 – “பொது மாநாடு”**

“மடத்துக்குளம் மோகன் நினைவரங்கம்.”

பாடகர் கோவன் பங்கேற்கும் ம.க.இ.க.கலைக் குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி!

**மாநாட்டுத் தலைமை : கொளத்தூர் மணி (தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்)**

**சிறப்புரை : மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்** (இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர்), **அருட்திரு பால பிரஜாபதி அடிகளார்** (தலைவர், அய்யாவழி), **வன்னி அரசு** (துணைப் பொதுச் செயலாளர், விசிக), **விடுதலை க.இராசேந்திரன்** (பொதுச்செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்), **சு.துரைசாமி** (கழகப் பொருளாளர்), **ப.ரத்தினசாமி** (கழக அமைப்புச் செயலாளர்).

**இந்துத்துவ சக்திகளுக்கு எதிரான உறுதிமொழி ஏற்பு !**

தமிழர்களே அணி திரண்டு வாரீர் !

– திராவிடர் விடுதலைக் கழகம்.

## ஈரோடு வடக்கு மாவட்டம் சார்பில் 1 லட்சம் மாநாட்டு நிதி! முதல் தவணையாக கழகத் தலைவரிடம் வழங்கினார்கள்



*ஈரோடு வடக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக வருகின்ற ஏப்ரல் 29, 30 சேலத்தில் நடைபெறும் இது தமிழ்நாடு! இளைய தலைமுறையின் எச்சரிக்கை மாநாட்டிற்காக கழகத் தோழர்கள் ஈரோடு வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கோபி, கொளப்பலூர், காசிபாளையம், அளுக்குளி, அந்தியூர், குருவரெட்டியூர், பவானி ஆகிய பகுதிகளில் கழக ஆதரவாளர்களிடம் துண்டறிக்கை அளித்தல் மற்றும் நன்கொடை திரட்டும் பணிகளில் சிறப்பாக செயல்பட்டனர். மாநில வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையில் மாவட்ட தலைவர் நாத்திகசோதி, மாவட்ட செயலாளர் எலத்தூர் செல்வக்குமார் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் இரமேசு, அழகிரி, கிருஷ்ணமூர்த்தி, இராவணன், அருளானந்தம், வேணுகோபால், வீரகார்த்திக், சுந்தரம், வினோத், வேலுச்சாமி, கருப்பணன், சுப்பிரமணியம், ரகுநாதன், மூர்த்தி, நிவாஸ் ஆகியோர் கலந்து கொண்டு நன்கொடை திரட்டும் பணியில் இணைந்து செயல்பட்டனர். அவ்வாறு நன்கொடையாக பெறப்பட்ட மாநாட்டு நிதியை முதல் தவணையாக ரூ. 1,00,000 (ஒரு லட்சம் மட்டும்) 16.04.23 அன்று காலை 11.00 மணியளவில் மேட்டூரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினர்.*

*அப்போது கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், வடக்கு மாவட்ட செயலாளர் எலத்தூர் செல்வக்குமார், நிவாஸ், அருளானந்தம், ரமேசு, இராவணன் மற்றும் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகம் எடுத்த புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா



**வேலூர்:** புரட்சியாளர் அம்பேத்கர் 132ஆவது பிறந்தநாள் விழா வேலூர் மாவட்டக் கழக சார்பில் மாவட்டச் செயலாளர் சிவா தலைமையில் குடியேற்றம், கொண்டசமுத்திரம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு முன்னணியினர் இணைந்து மாலை அணிவித்து முழக்கங்கள் எழுப்பி வீரவணக்கம் செலுத்தப்பட்டது. பின்பு அனைவரும் ஜாதி ஒழிப்பு உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர்.

நண்பகல் 12 மணிக்கு வேலூர் மாநகரில் விசிக ஒருங்கிணைத்த “ஜனநாயகம் காப்போம்! சனாதனத்தை வேரறுப்போம்!”பேரணியில் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

நண்பகல் 2 மணிக்கு ராமாலையில் திராவிட் மற்றும் பகுதித் தோழர்கள் ஒருங்கிணைப்பில் அம்பேத்கருடைய புகைப்படத்திற்கு மாலை அணிவித்து பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் சிறப்பு உணவு வழங்கப்பட்டது.

மாலை 5 மணிக்கு வேலூர் மாவட்டம் புட்டவாரபள்ளி கிராமத்தில் அமல்ராஜ், ஒருங்கிணைப்பில் பொதுமக்களோடு இணைந்து அம்பேத்கர் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இரவு பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

வாணியம்பாடி பகுதியில் வாணியம்பாடி நகர செயலாளர் சுரேசு தலைமையிலும், வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு பகுதியில் நகர செயலாளர் பார்த்திபன் தலைமையிலும், ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி திலீபன் தலைமையிலும், ஆற்காடு பகுதியில் பாஸ்கரன் சந்திரன் ஒருங்கிணைப்பிலும் அம்பேத்கர் பிறந்த விழா கொண்டாடப்பட்டது.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்டக் கழக சார்பில் 14.04.2023 அன்று காலை 10.00 மணியளவில் அம்பேத்கர் பிறந்தநாள் சமத்துவ நாள் நிகழ்வு திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் எதிரில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு முன்பு கழகப் பொருளாளர் துரைசாமி தலைமையில் மாவட்ட தலைவர் முகில் ராசு முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் ஆசிரியர் சிவகாமி அவர்கள் கொள்கை முழக்கங்களையும் புகழ் வணக்க முழக்கங்களையும் எழுப்ப தோழர்கள் தொடர்ந்து முழக்கங்களை எழுப்பினார்கள்.

தொடர்ந்து அம்பேத்கர்ஆற்றிய பணி குறித்தும் இனி நாம் மேற்கொள்ள விருக்கும் செயல்பாடுகள் குறித்து கழகத்தின் இணையதள பொறுப்பாளர் பரிமளராசன், தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் ஆசிரியர் சிவகாமி உரையாற்றினார்கள். நிறைவாக கழகப் பொருளாளர் துரைசாமி நிறைவுறையாற்றினார்.

பிறகு தமிழ்நாடு மாணவர் கழக அறிவுமதி சமத்துவ நாள் உறுதிமொழியினை கூற உறுதி மொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது, முடிவில் மாவட்டத் தலைவர் முகில் ராசு நன்றி கூறினார்.

இந்நிகழ்வில் கழகத்தின் தெற்கு பகுதி பொறுப்பாளர் ராமசாமி, மாநகர அமைப்பாளர் முத்து, 15 வேலம்பாளையம் அமைப்பாளர் மாரிமுத்து, அய்யப்பன், சரசு, சிரிஜா, ஈழமாறன், முத்தமிழ், யாழிசை, யாழினி, திருவள்ளுவர் பேரவை அருண், மனோஜ், வினோத் உள்ளிட்ட கழகத் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டார்.

**சென்னை :** புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளையொட்டி, காலை 9:30 மணியளவில், மயிலாப்பூர் விசாலாட்சி தோட்டம், சுப்பராயன் சாலை ஆகிய பகுதிகளில் அம்பேத்கர் சிலை மற்றும் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, அம்பேத்கர் மணிமண்டபத்தில் 10:30 மணியளவில் மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டத் தலைவர் வேழவேந்தன், ஏசுகுமார் மற்றும் சென்னை கழக தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**சேலம் :** புரட்சியாளர் அம்பேத்கர் 132வது பிறந்தநாளை முன்னிட்டு கொளத்தூர் பேருந்துநிலையத்தில் விசிக ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், சித்துசாமி, கொளத்தூர் விஜி, கொளத்தூர் நகரச் செயலாளர் அறிவுச்செல்வன், இளவரசன், கபிலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் திமுக ஒன்றியச் செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி மற்றும் காவை ஈசுவரன் ஆகியோர் கேக் வெட்டி கூடியிருந்த தோழர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கினர்.

**மதுரை :** திராவிடர் விடுதலைக் கழகம், புரட்சிகர இளைஞர் முன்னணி, தமிழக வாழ்வுரிமைப் பாதுகாப்பு மக்கள் கட்சியினர் ஒருங்கிணைந்து மதுரை அவுட்போஸ்டில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு பேரணியாகச் சென்று கொள்கை முழக்கங்கள் எழுப்பி மாலை அணிவித்தனர்.

**திண்டுக்கல் :** பழனியில் தந்தை பெரியார் சிலை அருகே வைக்கப்பட்டிருந்த அம்பேத்கரின் படத்திற்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் மரியாதை செலுத்தப்பட்டது. மருதமூர்த்தி உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**கோவை :** காந்திபுரம் பெரியார் சிலை முன்பு வைக்கப்பட்ட அம்பேத்கர் படத்திற்கு ஸ்டாலின் ராஜா தலைமையில் கொள்கை முழக்கங்கள் எழுப்பி கொண்டாடப்பட்டது.

பீளமேடு பகுதியில் அம்பேத்கர் படத்திற்கு இராஜாமணி தலைமையில் மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி கொண்டாடப்பட்டது.

நிகழ்வில் மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன், நிர்மல் குமார், கிருஷ்ணன், வெங்கட், இராஜாமணி, துளசி, ஸ்ருதி, மணிராஜ், எழிலரசன், ராஜேஷ் குமார், செழியன், சித்ரா கலந்து கொண்டனர்.

**தூத்துக்குடி :** அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடியில் பெரியார், அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் தலைமையில் நடைப்பெற்ற இந்நிகழ்வில் மாவட்டப் பொருளாளர் சந்திரசேகர், மாவட்டத் துணை தலைவர் பாலசுப்பிரமணியன், திராவிடர் கழக மண்டல பால்.இராசேந்திரம் உள்ளிட்ட தோழமை கழக நிர்வாகிகளும் தோழர்களும் கலந்து கொண்டனர்.

## சென்னையில் மாநாடு விளக்கக் கூட்டம்

புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாள் மற்றும்”இது தமிழ்நாடு! இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாடு!” விளக்கக் கூட்டம் ஏப்ரல் 13, மாலை 6 மணியளவில் அயனாவரம், ஜாயின்ட் ஆபிஸ் அருகில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சேத்துப்பட்டு இராசேந்திரன் தலைமை வகித்தார். வட சென்னை மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி முன்னிலை வகித்தார். முன்னதாக மாவட்டத் தலைவர் வேழவேந்தன் அம்பேத்கர் படத்தைத் திறந்து வைத்தார். நாத்திகனின் மந்திரமா? தந்திரமா ? நிகழ்ச்சி கூட்டத்தின் தொடக்கமாக நடைபெற்றது.

தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் திருப்பூர் மகிழவன் மாநாட்டின் நோக்கங்கள் குறித்து உரையாற்றினார். தொடர்ந்து, சென்னை கழகச் செயலாளர் இரா.உமாபதி, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.

திமுக பொதுக்குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசன் நிறைவுரையாற்றினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th April 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN